கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2004/2005 (ஜனவரி/பெப்ரவரி 2006)

# ISL 1101 Introduction to Islam - I

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி - **I** இல் எல்லா வினாக்களுக்கும் பகுதி - **II** இல் இரு வினாக்களுக்கும் பகுதி - **III** இல் ஒரு வினாவுக்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எடுதுக.

---

## பகுதி – I

01. சுருக்கமான விடை தருக.

(i) 'வஹீ' என்றால் என்ன?

(ii) ஷிர்கின் இரண்டு பிரதான வகைகளையும் குறிப்பிடுக.

(iii) றஸூல்மார்களுக்கு அவசியம் இருக்க வேண்டிய பண்புகள் யாவை?

(iv) அல்லாஹ்வுடைய பண்புகளில் 'ஜாயிஸ்' என்பது எதைக் குறிக்கிறது?

(v) தொழுவைக்கு வுழூ அவசியம் என்பதை வலியுறுத்தும் அல்குர்ஆன் வசனத்தை எழுதுக.

(vi) தேளிவான இணை வைத்தலுக்குச் சில உதாரணங்கள் தருக.

(vii) சங்கையான மாதங்கள் என அல்குர்ஆன் குறிப்பிடும் மாதங்கள் யாவை?

(viii) இஸ்லாத்தின் பார்வையில் முர்தத் எவ்வாறு கணிக்கப்படுகின்றார்?

(ix) இஸ்லாம், ஸகாத் வசூலிப்போரை ஏன் ஸகாத் பெறத் தகுதியானோரில் உள்ளடக்கியிருக்கிறது?

(x) லைலத்துல்கத்ர் இரவு ஏன் சிறப்புப் பெறுகிறது.

(3x10=30 புள்ளிகள்)

## பகுதி II

02. தௌஹீத் பற்றி பின்வரும் அம்சங்களை மையமாகக் கொண்டு எழுதுக.

(i) இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதற்கு அல்குர்ஆன் முன்வைக்கும் ஆதாரங்கள்
(ii) தௌஹீதின் வகைகள்
(iii) தௌஹீத் கோட்பாட்டுக்கெதிரான சிந்தனைகள்

(20 புள்ளிகள்)

03. ரிஸாலத் தொடர்பாக பின்வரும் தலைப்புகளில் விளக்குக.

(i) ரிஸாலத்தின் அவசியம்
(ii) ரிஸாலத்தின் சிறப்பம்சங்கள்
(iii) இறுதித் தத்துவம்

(20 புள்ளிகள்)

04. ஸகாத் பற்றி பின்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(i) ஸகாதின் முக்கியத்துவம்
(ii) மனிதர்களிடையே ஸகாத் ஏற்படுத்தும் தாக்கங்கள்
(iii) கூட்டு ஸகாதின் அவசியம்

(20 புள்ளிகள்)

## பகுதி - III

05. தொழுகையின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி உடல், உள பரிசுத்தத்தை ஏற்படுத்துவதில் தொழுகை வகிக்கும் பங்கு யாதென்றாராய்க.

(30 புள்ளிகள்)

06. ஒழுக்கம்மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் நோன்பு வகிக்கும் பங்கினை அதன் ஆத்மீக லௌகீகப்பயன்பாடுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

(30 புள்ளிகள்)